# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15


**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 2**
**FEBRUARY 2023 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜாமக்காரன் JAMAKKARAN



எனக்கு மிகவும் அன்பான தேவனுடைய பிள்ளைகளே ! உங்கள் யாவரையும் கர்த்தர் சுகத்தோடும் குறைவில்லாமலும் வாழ செய்வாராக.

(CPM)TPM சபையின் 100வது ஆண்டு நினைவுநாள் ஆகையால் இந்த மாத ஜாமக்காரனில் TPM சபை விஷயங்களை மட்டும் பகிர்ந்துக்கொள்கிறேன்.

(CPM)TPM **சபைகளின் 100 ஆண்டு வரலாறு நினைவு கூறுதல்** இவைகளைப்பற்றிதான் இந்த மாத செய்தியாக விளக்குகிறேன்.

**இந்த ஆண்டு (CPM)TPM சபையின் 100வது வருட வாழ்த்துதலை TPM சபையாருக்கு கூறிக்கொள்கிறேன்,** நான் மனம் (திரும்பின) இரட்சிக்கப்பட்ட காலத்திலிருந்தே (1964)ம் வருடத்திலிருந்தே அந்த சபையோடு எனக்கு தொடர்பு இருந்தது. **CPM (இலங்கை பெந்தே கோஸ்தே மிஷன் (சபை)** இப்படித்தான் அன்று அந்த சபை அழைக்கப்பட்டது. **இலங்கை** இன பிரச்சனைக்குப்பின் இந்த குறிப்பிட்ட சபை எந்த வெளி நாட்டுக்கு சென்று சபை ஆரம்பித்தாலும், **இலங்கை** என்ற நாட்டு பெயர் தங்கள் சபை பெயரில் இருப்பதால் சபைக்கு வருபவர்களை எல்லாரும் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்க ஆரம்பித்தார்கள்.

**சிங்கப்பூர்** நாட்டில் தான் முதன்முதல் அந்த **இலங்கை** என்ற பெயரை நீக்க வேண்டும் என்று அன்றைய அரசாங்கம் கேட்டுக்கொண்டது. அதன்பின்தான் உலக

அனைத்து தேசங்களிலும் உள்ள **இலங்கை பெந்தேகோஸ்தே சபை (மிஷன்)** தலைமை பாஸ்டர்மார் ஒன்றுகூடி (TPM) The Penticoastel Mission என்ற பெயர் சூட்டினர். The என்பதற்கு சிறப்பான அர்த்தம் உண்டு. நம் வேத புத்தகத்தை உலக நாடுகளில் **The Bible** என்று அழைப்பாளர்கள். டிக்ஷ்னரியிலும் சரித்திரத்திலும் The Bible என்று குறிப்பிட்டுள்ளது. காரணம் இந்த **வேத புஸ்தகத்தை** தவிற **சிறப்பான புத்தகம்**, கிரந்தம் **உலகில் வேறு எதுவும் இல்லை** என்று சிறந்த அர்த்தத்தை கொடுக்கிறது. உலகில் வேறு எந்த **மத புஸ்தகத்தையும் குரான், கீதை** இன்னும் பல மத புஸ்தகங்கள் எத்தனை இருந்தாலும் எந்த புஸ்தகத்துக்கு முன்னாலும் The என்ற எழுத்து இட்டதில்லை. அது கிறிஸ்தவ வேதத்துக்கு மட்டும்தான் பொறுந்தும்.

இந்த குறிப்பிட்ட பெந்தேகோஸ்தே சபையார் **இலங்கை** என்ற பெயரை நீக்கி The பெந்தேகோஸ்தே சபை (மிஷன்) என்று புதுபெயர்வைத்துக்கொண்டார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால் உலகில் எத்தனையோ பெந்தேகோஸ்தே சபைகள் உண்டு. ஆனால் **எங்கள் சபைதான்** எல்லா சபைகளைவிட சிறந்தது, அதனால் எங்கள் சபையைவிட **The** என்ற வார்த்தை வேறு **எந்த சபைக்கும் பொருந்தாது.** எங்கள் சபையை எந்த சபையோடும் ஒப்பிடமுடியாத (Uncomparable) **சிறப்பான சபை** எங்களுடையது மட்டும் என்று பெருமையாக சொல்லிக்கொள்கிறார்கள்.

உண்மையில் மற்றெந்த **பெந்தேகோஸ்தே சபைகளைவிட கட்டுப்பாட்டில், தனித்துவத்தில்** சிறந்த சபை TPM சபை என்று கூறினால் அது மிகையாகாது. இங்குள்ள அன்றைய காலத்தில் அதாவது ஆரம்ப காலகட்டங்களில் **பாஸ்டர்கள்** பெரும்பாலும் **பரிசுத்தாவான்கள்** என்று கூறும் அளவு **பாஸ்டர்கள்** தங்களை ஒடுக்கி **திருமணம் செய்யாமல் சிறப்பான** ஊழியம் செய்தார்கள். ஆனால் இன்று தலைகீழாக மாறி பெரும்பாலான TPM சபைகளில் விபச்சாரமும், கொலையும் **ஆண் புனர்ச்சியும்,** (Sisters) சகோதரிகள் **கற்பழிக்கப்படுதல்** ஆகிய குற்ற செய்திகள் இந்தியா முழுவதும் பெருகிவிட்டது. நான் சொல்லும் இந்த குற்றச்சாட்டுக்கெல்லாம் ஆதார புகைப்படம், கடிதங்கள், போலீஸ் FIR காப்பி யாவும் என்னிடத்தில் இருக்கிறது. என் ஜாமக்காரனிலேயே 3 TPM சபை பாஸ்டர்மார்களின் பாவ **லீலைகளை** புகைப்படத்தோடு வெளியிட்டேன். இந்த சபையில் சுய புணர்ச்சி பாவம் மிக அதிகம். **சுயபுணர்ச்சியினால்** பாதிக்கப்பட்டு காயப்பட்ட ஒரு பாஸ்டர் சேலத்தில் தையல்போடவோ, கட்டுப்போடவோ டாக்டரிடம் போனால் அதை TPM சபை விசுவாசி பார்த்து விட்டால் போதும் **பாஸ்டரே வைத்தியம்** செய்ய டாக்டரிடம் போகிறார் என்ற செய்தி **தீ போல்** பறவி **மருந்து சாப்பிடக்கூடாது** என்ற **சபை உபதேசத்தை** பாஸ்டரே மீறிவிட்டார் என்று கூறிவிடுவார்கள் என்ற பயத்தால் சேலத்துக்கு அடுத்த 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள **டேனிஷ்பேட்டை** அருகில் உள்ள என் கிளீனிக்குக்கு நேரில் வந்து இரண்டுமுறை வைத்தியம் செய்து சுகமானார்.

இந்த குறிப்பிட்ட சுயபுனர்ச்சி இந்த சபை பாஸ்டர்களிடம் பெருகியதின் காரணம். இவர்கள் **திருமணம்** செய்வதில்லை. இந்த **சுயபுனர்ச்சி** பாவம் செய்யாது போனால் தாங்கள் **விபச்சாரம் செய்துவிடுவோமோ** என்ற பயம் இவர்களுக்குள் உண்டு. அந்த பயத்தால்தான் இந்த செயலுக்கு அடிமையாகிபோனோம் என்கிறார்கள்.

இவைகளை எதற்கு குறிப்பிட்டேன் என்றால் தாங்கள் தான் **பரிசுத்த** சீயோனில் வாசம் செய்யும் **பரிசுத்த கூட்டம்** என்றும் **நாங்கள்தான்** வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்ட

1,44,000 பேர் என்றெல்லாம் பெருமை பட்டுக்கொள்ளும் இந்த குறிப்பிட்ட சபையின் **பாஸ்டர்மார்களின்** லட்சணம் எப்படி இருக்கிறது என்று TPM சபையில் உள்ள ஜாமக்காரன் வாசகர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இதை குறிப்பிடுகிறேன்.

ஒரு வேளை நீங்கள் கூறலாம் ஒரு பெரும் சபை ஸ்தாபனத்தில் அங்கொன்றும் இங்கொன்றும் நடக்கும் தவறுகளை நீங்கள் **பெரிதுபடுத்தி** அனைத்து TPMசபைகளையும் தவறு என்று கூறிவிடலாமா? என்று கேட்கலாம். ஆனால் இப்போதுள்ள TPM சபையின் பாவ நிலைமை **இந்தியா முழுவதும் உள்ள** சபைக்குள் சபை **ஊழியர்களுக்குள்ளும் ஊழியக்காரிகளுக்கும்** (Sisters) பலவித பாவ செயல் புறையோடிவிட்டது. அதனால்தான் சுமார் 20 வருடங்களுக்கு முன்பே CPM (TPM) சபை **இரட்சிப்படவேண்டும்** என்ற **தலைப்பிட்டு** பல சம்பவங்களையும் வசனத்துக்கு **விரோதமான பல உபதேச தவறுகளையும்** வசனங்களோடு **ஆதாரப்படுத்தி ஜாமக்காரனில் கட்டுறை எழுதினேன்.**

அந்த காலத்தில் உருப்படியான ஆழமான உபதேசங்களை கூறும் கட்டுக்கோப்பான சட்டங்கள் நிறைந்த சபை TPM என்பதால் **நானும்** என் **மனைவியும்** இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை TPMசபை **ஆராதனையில்** கலந்துக்கொள்வோம்.

## தூத்துக்குடி TPM சபை தலைமை பாஸ்டரின் ஊர் அறிந்த பாவ செய்தி

தமிழ்நாட்டில் தூத்துக்குடி சபை பாஸ்டரின் பாவ ஜீவியத்தை பற்றி **சென்னை சென்ட்ரல் சபைக்கு** சில ஆதாரங்களை வைத்து எழுதினேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. **பாஸ்டரால்** கர்பம் தரிக்கப்பட்ட **ஏழை பெண்** ஆகும். ஆலயத்தை பெருக்கி சுத்தம் செய்யும் அந்த பெண்ணுக்கு நியாயம்கேட்டு மறுபடியும் சென்னை தலைமை பாஸ்டருக்கு எழுதினேன்.

விவரம் சென்னை சென்ட்ரல் தலைமைக்கு போய்விட்டது என்று அறிந்த **தூத்துக்குடி** TPM பாஸ்டர் அந்த ஏழை பெண்ணின் தந்தைக்கு இரண்டு லட்சம் கையில் கொடுத்து வயிற்றில் உள்ள குழந்தையை கழுவி வெளியே எடுக்க ஆலோசனைக்கூறி அனுப்பிவிட்டார்.

என் ஜாமக்காரன் பத்திரிகையை **நக்கீரன்** என்ற அரசியல்வாதிகளின் ஊழல் இரகசியங்களை துப்பறிந்து கண்டுபிடித்து அவைகளைக்குறித்து **பகிரங்கமாக தைரியமாக** எழுதும் அந்த **பத்திரிக்கை** குழுவில் **ஜாமக்காரனை வாங்கும்** இரண்டு **கிறிஸ்தவர்கள்** உண்டு. ஒருவேளை அவர்கள் மூலமாக தூத்துக்குடி TPM பாஸ்டரின் விவரங்களை அறிந்திருப்பார்களோ என்னவோ. அவர்கள் ஆட்கள் தூத்துக்குடிக்கும் நேரில் வந்து விபரங்களை உறுதி செய்து கொண்டு அவர்கள் தங்கள் **நக்கீரனின்** பத்திரிகையின் முதல் பக்க **அட்டைபடத்தில்** பாஸ்டரின் **முழு நீள புகைப்படத்தை** வெளியிட்டு விவரங்களை விளக்கமாக அவர்களும் எழுதினார்கள். உடனேதான் தலைமை நடவடிக்கை எடுத்தது.

அந்த பாஸ்டரை ஊழிய பொறுப்பிலிருந்து நீக்கி சென்னை **புஸ்தக விற்பனை** நிலையத்தின் மேனேஜராக - பொருப்பு கொடுத்தார்கள் என்று கூறக்கேட்டேன். ஆனால் இப்போது அவர் அங்கில்லை என்றும் கேள்விப்பட்டேன். இந்த குறிப்பிட்ட **பாஸ்டர்** மிக நன்றாக **அன்னிய பாஷை** பேசுவார். **அன்னிய பாஷையில் தீர்க்கதரிசனம்** கூறுவார். இவர்கள் சபையின் **அன்னிய பாஷை** லட்சனத்தையும் நீங்கள் அறிந்துகொள்ளவே இந்த இச்சம்பவத்தில் **அன்னிய பாஷையை** நுழைத்தேன்.

## மற்றொரு கொலை சம்பவம்

அதே தூத்துக்குடி மகாநகரத்து TPM சபைக்கு மிக நல்ல சாட்சியுள்ள பாஸ்டர் புதிதாக வந்தார். அந்த நல்லவருக்கு நேர்ந்த கதி மிக மோசம். அவர் பிரசங்கத்தில் சபையில் ஊழியம் செய்யும் TPM **ஊழியக்காரிகளின் தவறுகளை** சுட்டிக்காட்டுவார். தனிப்பட்ட முறையிலும் அந்த **சகோதரிகளை** அழைத்து கண்டித்துள்ளார். சம்பவம் இவ்வளவுதான் என்னவிதமான பாவம் என்று எழுத நான் விரும்பவில்லை.

ஒரு நாள் விடியற்காலை சபையிலிருந்து கதரும் சத்தம் கேட்டது. TPM சபையின் அருகே ஒரு பெரிய அரசாங்க அதிகாரி ஒருவர் குடியிருக்கிறார் – அவர் மனைவி ஒரு **டாக்டர்** அவர்களும் அந்த சத்தத்தை கேட்டார்கள் என்று கூறக்கேட்டேன். ஒரு வேளை பிசாசு பிடித்தவர்கள் ஜெபிக்க வந்திருப்பார்கள், அவர்களின் கதரலாக இருக்கலாம் என்று நினைத்து தூங்கிவிட்டனர். மறுநாள் அதிகாரிகள் இருவரும் வேலைக்கு புறப்படும் போது Faith Home (TPM சபையை அப்படித்தான் அழைப்பார்கள்.) சபைக்கு முன் ஏராளமான மக்கள் கூட்டத்தை கண்டார்கள். விவரம் அறிய முன் வீட்டுக்கார தம்பதிகளும் கூட்டத்தில் நுழைந்து பார்த்தார்கள், பாஸ்டரின் மரித்த சவத்தை விடிவதற்குள் **பெட்டியில்** வைத்துவிட்டனர். பாஸ்டர் இருதய வலியால் இறந்து போனார் என்று Sisters பெண் ஊழியர்கள் கூறினார்கள். ஆனால் TPM சபை மெம்பருக்கும் சபைக்கு அருகே குடியிருக்கும் அந்த தம்பதிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. **செத்துப்போன பாஸ்டரின் கழுத்தில் நகத்தால் கீரப்பட்ட காயங்கள்** இருப்பதை கண்டுவிட்டனர். தன் சந்தேகத்தை தன் கணவரிடம் அந்த டாக்டர் மனைவி கூறினார். கணவர் சொன்னார், பொரு பார்ப்போம், **போஸ்ட்மார்டம் ரிப்போர்ட்** விவரம் வரும். அதன் பின் என்ன செய்யலாம் என்று யோசிப்போம் என்றார். மரித்தவர் நல்ல ஆரோக்கியம் உள்ள பாஸ்டரும், **உண்மையுள்ளவருமான** பாஸ்டர் திடீரென்று இருதயம் அடைப்பு உண்டாகி மரிக்க நியாயம் இல்லையே என்றார். அதற்குள் சென்னையிலிருந்து தலைமை **சென்டர் பாஸ்டர்கள்** காரில் வந்து சேர்ந்தார்கள். வந்த உடனே பாட்டுப்பாடி ஜெபித்து மரித்த பாஸ்டரை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டனர். ஆனால் தகவல் போலீஸ் கமிஷனருக்கு அறிவிக்க பாஸ்டர் உடலை **போஸ்ட்மார்டம்** செய்யாமல் அடக்கம் செய்ய கூடாது என்று கூறி ஊர்வலம் சென்ற ஆம்புலன்சை போலீஸார் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்று விட்டனர். **சென்ட்ரல் பாஸ்டர்களுக்கு** காவல் துறை தலைமையில் உள்ள உயர் அதிகாரிகள் சிலரின் சிபாரிசினால் **போஸ்ட் மார்டம் ரிப்போர்ட்** விவரம் வெளியில் வராமல் பார்த்துக்கொண்டார்கள். நடந்த கொலைக்கு காரணம் என்னவென்றால் TPM சபையின் **பெண் ஊழியக்காரிகள்** சிலருக்கு அருகே உள்ள ஆளும் கட்சி அரசியல்வாதியுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. TPM சபை விசுவாசியுமான அந்த அரசியல்வாதி சிஸ்டர் இரண்டு பேருக்கு ஒருவரோடு நெருக்கம் அதிகம் இருந்தததை பாஸ்டர் அவர்கள் கண்டுபிடித்துவிட்டார், அந்த சகோதரிகளை **நேரிடையாக** கண்டித்து அந்த சகோதரிகளை **தூத்துக்குடியிலிருந்து** இடம் மாற்றம் செய்ய **தலைமை சென்டர் பாஸ்டர்களுக்கு** தூத்துக்குடி பாஸ்டர் தகவல் அனுப்பியது. **ஃபெயித் ஹோமில்** ஊழியம் செய்த பெண் ஊழியக்காரிகளுக்கு தெரிந்துவிட்டது. பாஸ்டர் மேல் வெறுப்பு உண்டாகி அன்று இரவு பாஸ்டருக்கும் – சகோதரிகளுக்கும் வாக்குவாதம் உண்டாகியதாக கூறப்பட்டது.

இதன் காரணமாக பாஸ்டர் உண்மை அறிந்துவிட்டார் என்பதால் இந்த கொலை நடந்திருக்குமோ என்று சபை விசுவாசிகள் பேசிக்கொண்டார்களாம். **விவரம் ஊர் மக்கள்** அறிந்தால்

சபைக்கு மிகவும் கெட்ட பெயர் வந்துவிடும் என்பதால் சபை பணத்திலருந்து லட்சக்கணக்கில் பணம் எடுத்து அந்த சாட்சிக்கெட்ட **செய்திகள் வெளிவராமல்** இருக்க பணம் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுத்து பாஸ்டரின் **மரண இரசியத்தை** அமுக்கி புதைத்து விட்டனர் என்றாலும் தினகரன் என்ற தினசரி பத்திரிகையில் அந்த கொலை செய்தி வெளிவந்துவிட்டது. அந்த சகோதரிகளும் சபை ஆராதனையில் பாட்டுபாடுவார்கள். **அன்னிய பாஷை** பேசி **தீர்க்கதரிசனம்** கூறுபவர்களாகும். இதை வாசிக்கும் TPM வாசகர்கள் கூறுங்கள். இந்த அன்னிய பாஷைகளை இனியும் நம்புவீர்களா? யோசியுங்கள்.

## கேரளாவிலும் இதே மாதிரியான கொலை சம்பவம்

கேரளாவில் **பத்தினம்திட்டா** மாவட்ட தலை நகரத்தில் **TPM சபையிலும் Fபெயித் ஹோம் சகோதரிகளால்** பாஸ்டர் **கொல்லப்பட்ட சம்பவம்** நடந்தது. அந்த வழக்கு இன்னும் முடியவில்லை என்று கூறப்படுகிறது. 10 வருடத்துக்குமுன் என் மலையாள பாஷை ஜாமக்காரனில் முழு விவரங்களையும் எழுதியிருந்தேன்.

- **சென்னை சென்ட்ரல் தலைமை TPM சபையிலும் பாவ சம்பவங்கள்**

இங்கேயும் **பெண் ஊழியக்கார** சகோதரிக்கு (SISTERS) பாஸ்டரால் பல பிரச்சனை ஏற்பட்டது. அந்த செய்திகள் You tube லும் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. **Fபெயித் ஹோம்** சகோதரிகள் இருவர் தனக்கு **பாஸ்டர்களால்** நேரிட்ட சம்பவத்தை You tubeல் நேரிடையாக **அழுது கொண்டே** பகிர்ந்து கொண்டார்கள். இந்த சம்பவம் இரண்டரை வருடத்துக்கு முன் முதல் கொரோனா கிருமி பரவுவதற்குமுன் எனக்கும் மற்றவர்களுக்கும் You tube ஆடியோ செய்திகளாக அனுப்பப்பட்டது. **தலைமை சென்ட்ரல்** சபை விசுவாசிகள் இருவர் பாஸ்டர்களிடம் அந்த சகோதரிகளுக்கு நேரிட்ட சம்பவத்தை குறித்து அவர்களுக்குள் நேரிடையாக **பேசிய வாக்கு வாதத்ததை** கூட **மொபைலில் பதிவு** செய்து எனக்கு அனுப்பினர். ஆனால் இந்த சபை சகோதரிகளின் அவலத்தையும் You tubeல் வந்த செய்திகளையும் ஜாமக்காரனில் அன்று வெளியிடவில்லை. காரணம், அந்த ஆடியோவின் உண்மை தன்மையை என்னால் **நேரில் சென்று விசாரித்து** உறுதி செய்ய முடியாமல் **கொரோனா** தடுத்துவிட்டது. ஆனால் இப்போது இந்த செய்திகளை அறிவிக்க நேர்ந்தது.

மேலே குறிப்பிட்ட செய்திகள் மட்டுமல்ல **TPM சபையின் அவலங்களும் – ஆபாசங்களும் என்ற தலைப்பில்** நான்கு நபர்கள் **சிறு புஸ்தகமாக** அமைத்து TPMசபையில் உள்ள **விசுவாசிகளுக்கு** மட்டும் அனுப்பி **சபை விசுவாசிகளிடம்** விழிப்புணர்வு உண்டாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். **அதை தயாரித்தவர்கள்** யாவரும் **பரம்பரை TPM சபை** விசுவாச குடும்பங்களை சேர்ந்தவர்கள் என்பதுதான் என் மனதை வேதனை அடைய செய்தது. கர்த்தரின் நாமத்துக்கு அவமானம் உண்டாகும், சாட்சி கெடும் என்பதால் இன்னும் வெளியிடவில்லை என்றார்கள்.

## இப்படிப்பட்ட பரிசுத்த குலைச்சல் TPM சபையில் ஏற்பட காரணம் என்ன?

இங்கு ஊழியத்துக்கு வரும் **பாஸ்டர்கள்** ஒரு சிலரை தவிர உண்மையான அழைப்பை பெற்று TPM சபை **பாஸ்டர் ஊழியத்துக்கு வருபவர்கள்** மிக மிக குறைவு. ஊழியத்துக்கு வந்தவர் TPMயில் இணைந்த உடன் **பாஸ்டராக முடியாது.** முதலாவது **சீனியர் பாஸ்டர்களுக்கு** அடிமையைபோல வேலை செய்ய வேண்டும். அதிலும் **குறைவான படிப்புடன்** வருபவர்கள் பலர் சபையில்

**ஊழியக்காரர்களாகவே** மதிக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட வாலிப ஊழியர்கள்தான் பல இடத்தில் தவறாக பயன்படுத்தப்படுகிறார்கள். அடிமைகளைப்போல நடத்தப்படுவார்கள். கேட்டால் அது ஒரு ஊழிய பயிற்சி என்பார்கள். ஊழியத்துக்கு வரும்போதே திருமணம் செய்யவதில்லை என்ற உறுதிமொழி கொடுக்க வேண்டும். அதன் அடிப்டையில் குடும்ப உறவை அறவே விட்டுவிட வேண்டும். கடித போக்குவரத்தும் கிடையாது.

ஊழியத்தில் சேர்ந்த உடன் **பெற்றோரோ,** உறவினரோ, **அண்ணன**, தம்பி யாரும் அவர்களை காண வரக்கூடாது. குடும்ப **வீட்டின் திருமணம்**, மரணம் போன்ற எந்த **காரியங்களுக்கும்** போய்வர பாஸ்டருக்கு **அனுமதி இல்லை.** எல்லா உறவினர்களையும் வெறுக்க வேண்டும். நவீன காலத்தில் **தலைமை பாஸ்டர்** கையில் மட்டும் மொபைல் வைத்திருக்கலாம். **வசதியுள்ள பெரிய TPM சபைகளில்** லேண்ட்போன் இருக்கும். அதுவும் இன்கம்மிங் செய்தி கேட்கலாம் மற்றபடி யாரும் அந்த போனை **உபயோகிக்காதபடி** தொலைபேசிக்குறிய பூட்டை போட்டுவிடுவார்கள். Fஃபெயித்ஹோமில் இருந்து யாரும் அந்த போனை தலைமை பாஸ்டர் அனுமதியில்லாமல் உபயோகிக்க முடியாது.

இப்படிப்பட்ட கட்டுப்பாடு உள்ள வாலிப TPM ஊழியர்களை சில பெரிய பாஸ்டர்கள் தங்கள் காம உணர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

## TPM முக்கிய உபதேசம் பாஸ்டர்கள் திருமணம் செய்யக்கூடாது.

TPM சபையில் மிக முக்கியமான உபதேசம் **பாஸ்டர்கள் திருமணம்** செய்துகொள்ளக்கூடாது என்பதாகும். அதே வேலையில் இவர்களின் **வீட்டு சந்திப்பில்** ஒரு சில வசதி படைத்த வீடுகளில் இவர்களுக்கு **செம தீனி** சாப்பாடு கிடைக்கும். **Fஃபேயித் ஹோமிலும்** வாரம் மூன்று அல்லது நான்கு முறையாவது **இறைச்சி, மீன்** ஆகியவை சபை **பெண் ஊழியர்கள்** சமைத்து **தலைமை பாஸ்டருக்கு** படைக்க வேண்டும். **ஒரு வார** உபவாசம், ஒரு மாத உபவாசம் சபையில் வரும் **வியாதியஸ்தருக்காக** ஏறெடுப்பதாக அறிவிப்பார்கள். ஆனால் மாலை நேரம் இரண்டு மடங்கு **சிறப்பு ஆகாரம்** சமைத்து சாப்பிடுவார்கள். TPM **சபையில் அடிக்கடி உபவாசம்** என்பதால் சபை **பாஸ்டர் மட்டும்** வீடு சந்திப்பு என்ற பெயரில் வெளியில் சென்று இஷ்டப்பட்ட சாப்பாடு இறைச்சி ஆகியவற்றை **செமையாக சாப்பிடுவார்கள்.** இப்படிப்பட்ட **தீனி,** சாப்பிடும் சாப்பாடு இவர்கள் நன்றாக சாப்பிடுவார்கள் என்பதை நீங்கள் **பாஸ்டர்கள் உருவத்தை** பார்த்தாலே கண்டு பிடிக்கலாம். **செம தீனி** தின்பவர்கள் என்றும் யூகிக்கலாம். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுள்ள **சிலர்தான் மெலிந்து காணப்படுவார்கள்.** உண்மையாக உபவாசம எடுப்பார்கள்.

இப்போது கவனியுங்கள், பாஸ்டர்களுக்கு திருமணம் இல்லை, **சாப்பாட்டில்** கட்டுப்பாடு இல்லை, **தூக்கமோ நல்ல தூக்கம்,** இரவு முழுவதும் கண்விழித்து ஜெபிப்பதாக கூறுவார்கள். ஆனால் நெடு முட்டிபோடாமல் தரையில் முட்டிபோட்டு முட்டியில் அமர்ந்து **தலையை முட்டியில் கவிழ்த்து உறங்க கற்றுக்கொள்கிறார்கள்.** யாராவது திடீரென்று பார்க்க வந்தால் **ஜெபிப்பதாக** அறிவிப்பார்கள். இப்படிப்பட்ட சரீரத்தில் **இயற்கையாக உற்பத்தியாகும் காம உணர்வுக்கு** OUTLET **எங்கே? எப்படி?** இதை கட்டுப்படுத்த முடியாதவர்கள்தான் **பெண் ஊழியர்களை கூட்டமாக வீட்டு சந்திப்பு, ஊழியம்** என்று கூறி அவர்களை வெளியே அனுப்பிவிட்டு Fஃபெயித் ஹோமில் தனிமையில் இருக்கும் சகோதரிகளுடனும் சபை **மைதானத்தை பெருக்க வரும் பெண்களுடனும் தன் உணர்ச்சிகளை தனித்துக்கொள்ள பயன்படுத்திக்கொள்கிறார்கள். இப்படிபட்ட**

**பாவசெயலுக்கு தைரியம் இல்லாதவர்கள் ஊழிய பயிற்சிக்கு வந்த வாலிப தம்பிமாரையும் தம் காமத்துக்கு பயன்படுத்தி தானும் பாவம்செய்து அந்த வாலிப ஊழியரையும் அந்த ஆண் புணர்ச்சி பாவத்துக்கு பயிற்சிவித்து அவனை கெடுக்கிறார்.**

இவைகளை அறிந்துகொண்ட விசுவாசிகள் தங்கள் தவறை தட்டி கேட்காதிருக்க விசுவாசிகளிலேயே ரவுடிகள் இருக்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பு இவர்களுக்கு உண்டு.

சேலம் TPM பாஸ்டர் பிரச்சனை சேலம் **அஸ்தம்பட்டி போலீஸ் ஸ்டேஷன் வரை** சென்று பாஸ்டர்களை அழைத்து ஸ்டேஷனில் அமரவைத்துவிட்டனர். சில நல்லவர்கள் **பத்திரிகைகளுக்கு** செய்தி அனுப்பாமல் பார்த்துக்கொண்டார்கள். **அவிசுவாசிகள்** ஆவியில்லாதவர் என்று இவர்களால் கூறப்படும் C.S.I., லூத்தரன். **சபை ஆயர்கள்** போலீஸ் ஸ்டேஷனுக்கும். **கோர்ட்டுக்கும் அங்கியுடன்** அலைவது போல, **TPM பாஸ்டர்களும் ஜிப்பா வேஷ்டியுடன்** பல ஊர்களில் **போலீஸ் ஸ்டேஷனுக்கும், கோர்ட்டுக்கும்** போவது சர்வசாதாரணமாகிவிட்டது.

## Fஃபெயித் ஹோம் சிஸ்டர்ஸ் (ஊழியக்காரிகள்)

இவர்களும் பெரும்பாலும் **ஊழிய அழைப்பை** பெற்று வந்தவர்கள் **அல்ல. வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள ஏழை குடும்பத்தை சேர்ந்தவர்கள்.** திருமணம் செய்ய இவர்கள் குடும்ப நிலையில் **வழியே இல்லை என்பதை அறிந்து ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து ஊழியம் செய்தால் தன் திருமண எண்ணத்தை மறக்க இயலும்** என்று தவறான எண்ணம் கொண்டு ஊழியம் செய்ய வந்து ஏமாந்து போன பரிதாபத்துக்குரிய சகோதரிகள். இவர்களை **சமையல் செய்யவும், மதர்** என்று அழைக்கப்படும் **வயது கூடிய சகோதரிகளுக்கு** உதவி செய்யவும் பயன்படுத்துகிறார்கள். **பகலில் மீதி நேரங்களில்** தனியாக அமர்ந்து ஜெபிக்க வேண்டும். அந்த ஜெபமும் வெறும் **ஸ்தோத்திரம், ஸ்தோஸ்திரம், ஸ்தோஸ்திரம்** என்று கூறிக்கொண்டிருப்பார்கள். இவைகள் யாவும் **சுமார் நாற்பது வருடத்துக்கு முன்** FAITH HOME ல் **பாஸ்டரை காண நான் சென்ற** போது நானே நேரில் **கண்ட காட்சிகள் ஆகும்**, மற்றொரு புறம் **வாலிப சகோதர ஊழியக்கார தம்பிமார்** அப்படியே **முழங்காலிட்டு முட்டியில் உட்கார்ந்தபடியே** ஸ்தோஸ்திரம்! ஸ்தோஸ்திரம்!! என்று கூறிக்கொண்டும் வேத புஸ்தகத்தை வாசித்துக்கொண்டும் இருப்பார்கள்.

ஆனால் **வாலிப சிந்தனைகள்** பலவித எண்ணங்களில் சிறகடிக்கும். மத்தியான நேரம் **சீனியர் பாஸ்டர்களுக்கு கால் அமுக்கிவிட வேண்டும்.** சீனியர் பாஸ்டர்களின் **ஜிப்பா வேஷ்டிகளை துவைத்து போட வேண்டும்.** இதில் **தாலந்துபெற்ற** வாலிப ஊழியர்கள் **துதி ஆராதனை நடத்தவும்** சிறு பிள்ளைகளுக்கு **கதை சொல்லிக் கொடுக்கவும் மற்ற பாஸ்டர்களின் பிரசங்க குறிப்புகளை எடுத்து அதையே இவர்கள் பிரசங்கமாக செய்யும் தாலந்தை** பயிற்சிவித்துக்கொள்கிறார்கள். இதில் **தேறினவனை** வேத பாட பயிற்சிக்கு **சென்ட்ரல் சபை ஏற்படுத்திய இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.**

கொஞ்சம் அதிகம் படித்த வாலிபர்களுக்கும் படித்த பெண்களுக்கும் TPMல் **தனி மரியாதை** உண்டு. இவர்கள் பாஸ்டர்களிடம் **பயந்து பணிந்து, நயந்து** ஜீவிக்க பழகியவர்களுக்கு **சீனியர் பாஸ்டர் கண்களில் தயை கிடைக்கிறது**. சீக்கிரமே **ஆராதனையில் ஜெபிக்க** அனுமதிக்கப்படுவார்கள். **பெண்களும் அப்படியே.**

சரியான **மனம் திரும்புதல் பெறாமல்** சபை ஊழியத்துக்கு வந்து சேரும் **பெண்களும்,**

**வாலிபர்களும் தான்** சீக்கிரமே **இரகசிய பாவங்களில்** விழுந்துவிடுகிறார்கள். இதை இவர்கள் சீக்கிரம் சரி செய்யாமல் போனால் இவர்கள் வளர்ந்து **சீனியர் பாஸ்டர்** பதவி உயர்வு பெற்றாலும் அந்த பாவ செயல்கள் **இரகசியமாக அவர்களை தொடர்ந்துகொண்டு இருக்கிறது.** இவர்களால் **உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல்** பல குறுக்கு வழிகளை தேடி **தன்னையும்** தன் சரீர **உணர்ச்சிகளை** திருப்திப்படுத்திக் கொள்கிறார்கள்.

மேலும் நான் எழுதுவதை வாசித்து நமது TPM சபையில் இப்படியெல்லம்கூட நடக்கிறதா? என்று TPM சபை விசுவாசிகள் ஆச்சரியப்படுவார்கள். பெரும்பாலான சபையில் உள்ள விசுவாசிகள் மூப்பர்களுக்கு கூட நான் எழுதிய சம்பவங்களை குறித்து அறிந்தே இருக்கமாட்டார்கள். ஆனால் எங்களைப்போன்ற **மருத்துவர்கள்,** பாஸ்டர்களின் மிகமிக நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களை தங்கள் மனைவியிடம் அல்லது தங்கள் கனவரிடம் சிலர் மேலே குறிப்பிட்ட பாவங்களை அவர்களிடம் பகிர்ந்துகொள்வதால் **இரகசியம்** கசிந்து சபையில் இருக்கும் **சிலரிடமும். எங்களைப்போன்றவர்களிடமும்** TPM சபையின் பல இரகசிய விஷயங்களை கசிய விடுவார்கள்.

## கொடுமைகளை அனுபவித்த கேரள கத்தோலிக்கக் கண்ணியாஸ்திரிகள்

சமீபத்தில் **கேரளாவில் கத்தோலிக்க** சபையில் **கண்ணியாஸ்திரி** மடத்தில் உள்ள கண்ணியாஸ்திரிகள்கூட தன்னோடு மடத்தில் ஊழியம் செய்யும் **கண்ணியா ஸ்திரிகளால்** கொடுமையை அனுபவித்த சம்பவங்களையும், **ஆயர்கள்** கண்ணியாஸ்திரிகளை தன் பாவ செயலுக்கு ஒத்துழைக்க கட்டாயப்படுத்திய விவரங்களும். கண்ணியாஸ்திரிக்குள்ளேயே நடக்கும் பல **விபரீத விளையாட்டுகள்**. கல்லூரி ராகிங்போல **புதிய கண்ணியாஸ்திரிகளை** படுத்தும் **ஆபாச** விளையாட்டு காட்சிகளையும் ஒரு **புத்தகமாக்கி** அதை வெளியிட்டார்கள் கத்தோலிக்க சபை நீதிமன்றம் மூலம் அந்த புஸ்தகம் வெளியிட தடை உத்தரவு பெற்றார்கள். ஆனால் உயர் நீதிமன்றம் அந்த தடை உத்தரவை நீக்கிவிட்டது. இப்போது அந்த புஸ்தகம் இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து ஆயிரக்கணக்கில் **இந்தியா முழுவதும்** விற்றுபோனது.

**நானும் ஒரு புஸ்தகம்** என் லைப்ரரியில் வாங்கி வைத்துள்ளேன். அந்த புஸ்தகத்தை எழுதிய கண்ணியாஸ்திரியும் இரண்டு முறை பாதிக்கப்பட்டு மடத்திலிருந்து தப்பித்து வெளியே வந்து போலீஸில் அடைக்கலம் புகுந்தாள்.

சுமார் 6 வருடங்கள் வழக்கு நீதிமன்றத்தில் நடந்து **இரண்டு பிஷப்** நான்கு **கண்ணியாஸ்திரிகள்** கைது செய்யப்பட்டனர்.

## TPM சபையில் பாதிக்கப்பட்ட சகோதரிகள் வெளியிட்ட துண்டு பிரதிகள்

- கண்ணியாஸ்திரிகள் அனுபவித்தது போல 40 வருடத்துக்குமுன் **TPM ஃபெயித் ஹோம்** சகோதரிகளிலிருந்து இருவர் TPM சபையிலிருந்து வெளியேறி தாங்கள் பட்டபாடுகள் பாஸ்டர், சபை மூப்பர்களை கொண்டு அவர்களை பயமுறுத்தி 4 நாட்கள் அறையில் அடைத்து வைத்தது. TPM காணிக்கை தசம பாகத்தை தவறாக கையாளும் விதம் யாவற்றையும் சுருக்கமாக எழுதி துண்டு பிரதி மூலம் விளம்பரப் படுத்தினார்கள்.

ஆனால் ஒரு வாரத்தில் அவர்கள் அடிபட்டு விதியோரம் வீசப்பட்டு உயிர் பிழைத்தார்கள். அவர்களை அடித்தவர்கள் ஹெல்மெட் அணிந்திருந்தார்கள். ஆகைவே அடையாளம் தெரியாததால் பேலீஸில் அந்த வழக்கு வெருமனே முடித்துவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**கேரள TPM பெண்களுக்கு** உள்ள தைரியம் **தமிழ்நாட்டு** TPM பெண்களுக்கும். சபை ஆண்களுக்கும் இல்லை.

இப்படிப்பட்ட செய்திகள் யாவும் TPM சபையிலிருந்த வெளியேறியவர்கள் அல்லது **வெளியே தள்ளப்பட்டவர்கள்** யாவரும் மறுபடியும் இவர்கள் **சரியான மனம்திரும்புதலுக்கு** வந்த பின் என்னோடு மணிக்கணக்காக, கதைக் கதையாகக் கூற நான் கேட்டதைதான் இங்கு எழுதுகிறேன்.

### TPM **சபையில் இப்படிப்பட்ட இரகசிய பாவத்துக்கு காரணம் என்ன ?**

TPM ஊழியர்கள், **(பாஸ்டர்கள்)** ஊழியக்காரிகள் **திருமணம் செய்யக்கூடாது** என்ற **வேத வசனத்துக்கு விரோதமான** உபதேசத்தை இவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். அதனால் கல்யாணம் செய்த **மற்ற பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களை** மிக மிக அற்பமாக எண்ணுகிறார்கள். அவர்களை இவர்கள் மதிப்பதே இல்லை. இவர்கள் TPM சபை விசுவாசிகள் வீட்டில் திருமணம் விசேஷம் என்றால் அந்த விசேஷத்துக்கு **மாப்பிள்ளை** வீட்டாரின் அல்லது **பெண்** வீட்டாரின் உறவினர் ஒருவரின் சொந்தக்காரரான ஒருவரை அறிமுகப்படுத்தி இவர் பிரபல பெரிய **பெந்தேகோஸ்தே சபையின் பாஸ்டர்** என்று அந்த வீட்டார் அறிமுகப்படுத்தி திருமண **ஆராதனையில் ஜெபிக்க** அவரையும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்ட போது TPM பாஸ்டர் **அனுமதிக்கவே இல்லை.** மேலும் நாங்கள் ஜெபித்து முடித்துவிட்டு வெளியேறின பின் நீங்கள் யாரை வேண்டுமானாலும் அழைத்து ஜெபித்துக்கொள்ளுங்கள் என்று கூறி சென்று விட்டார்.

நீங்கள் அறிமுகப்படுத்திய பாஸ்டர் பிரதிஷ்டை செய்யப்படாதவர், மேலும் அவர் **திருமணமானவர்,** கர்த்தர் அதை விரும்பமாட்டார் என்று கூறிவிட்டு TPM பாஸ்டர் எழுந்து போய்விட்டார். அடுத்த ஞாயிறுTPM ஆராதனையில் பிரசங்கம் முழுவதும் அந்த திருமண நிகழ்ச்சி பற்றிய செய்தியை கூறி தான் பிரசங்கமாக நிகழ்த்தினார்.

அதில் அவர் கூறியது நமது TPM சபை உலகின் மற்ற எந்த சபையிலும் மிகவும் உயர்ந்ததாகும். நாம்தான் **வெளி 14ல்** எழுதப்பட்ட **லட்சத்து நாற்பத்து நாலாயிரம்** கூட்டத்தில் உள்ளவர் ஆகும்.

வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் அதே அதிகாரத்தில் மற்ற ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் **ஸ்திரிகளால் கறைபடாதவர்கள், கற்புள்ளவர்கள்,** அவர்கள்தான் TPM பாஸ்டர்களாகும். அதனால்தான் நாங்கள் **திருமணம்** செய்யாமல் கர்த்தருக்கென்று எங்களை பிரதிஷ்டை செய்துள்ளோம். எந்த பெந்தேகோஸ்தே சபையிலிருந்து நம் சபையில் அங்கத்தினராக வருகிறவர்கள் யாரானாலும் சரி, அது **பாஸ்டரானாலும்** சரி, TPM **பாஸ்டர் கையினால்** மறுபடியும் **ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.** அவர்கள்ஏற்கனவே முழுகி எடுத்த ஞானஸ்நானம் **செல்லாது**. காரணம் **கலியாணம் செய்தவர்கள் கையினால்** ஞானஸ்நானம் எடுத்தால் செல்லாது என்றார். இவர் கூறியபடி பார்த்தால் வேதத்தில் சீஷர்கள் அப்போஸ்தலர்கள் கொடுத்த ஞானஸ்நானம் செல்லாது, பிலிப்பு எத்தியோப்பியா மந்திரிக்கு கொடுத்த ஞானஸ்நானம் செல்லாது என்றாகியது. **இதுதான் கள்ள உபதேசம் ஆகும்.**

இவர்கள் கூறுவது எல்லாம் **பொய்யான** உபதேசமாகும். **கள்ள** உபதேசமாகும். வேதவசனத்துக்கு **விரோதமான** உபதேசமாகும்.

முதலாவது நாம் தெரிந்த கொள்ள வேண்டியது. **ஆதியிலேயே மனிதன் தனிமையாக**

**இருப்பது நல்லதல்ல** என்ற கர்த்தர் கூறினார். இந்த வார்த்தையையே TPM சபை பாஸ்டர்கள் மீறினார்கள். கீழ்படியவில்லை.

**திருமணம்** என்பது தேவனுடைய அனாதி திட்டமாகும். மனிதன் திருமணம் செய்து கர்த்தரை **துதிப்பதற்கென்றே தேவபக்தியுள்ள சந்ததியை** பெற்றெடுக்க வேண்டும் மல் 2:15. என்பதுதான் தெய்வத்தின் திட்டமாகும். விவாகம் கர்த்தரின் பார்வையில் **கனமுள்ளது** என்று பவுல் கூறுகிறார். ஆங்கிலத்தில் கனம் என்ற வார்த்தைக்கு REV என்ற சொல்லை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து மேசியாவாக பூமியில் பிறந்து தனது 30வது வயதில் ஊழியம் தொடங்கியபோது கானான் என்ற ஊரில் தனது நண்பன் வீட்டு திருமணத்துக்குதான் குடும்பமாக சென்று **முதல் அற்புதத்தை** செய்தார்.

## TPM பாஸ்டர்கள் கூறும் காரணம்

TPM பாஸ்டர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று கூற அவர்கள் கூறும் காரணம் **சீஷர்கள்** திருமணம் செய்வதில்லை. இயேசு திருமணம் செய்யவில்லை என்றெல்லாம் சிறுபிள்ளைதனமாக கூறி சமாளிக்கிறார்கள்.

**பேதுரு** கலியாணம் செய்தவர். பேதுருவின் மாமியார் சுகவீனமாக படுக்கையில் இருந்தபோது இயேசு பேதுருவின் வீட்டுக்கு நேரில் சென்று மாமியாரை சுகமாக்கினார் என்று எழுதியிருக்கிறது.

**பவுல்** திருமணம் செய்தவர், பலர் அதற்கு வேதத்தில் **ஆதாரம்** இல்லை என்பார்கள். ஆதாரம் உண்டு. **பவுல் சனகரிப் சங்கத்தின்** அங்கத்தினன். அக்காலத்தில் **திருமணம் செய்தவர்கள்தான்**, அந்த உயர்ந்த படித்தவர்கள் உள்ள சனகரீப் சங்கத்தில் அங்தினன் ஆக முடியும். சபை சரித்திரத்தை வாசித்தால் இது புரியும். ஒருவேளை பவுல் திருமணம் செய்தபின் மனைவி இறந்திருக்கலாம். ஆனால் அதைப்பற்றிய தெளிவான ஆதாரம் இல்லை.

திருமணம் செய்தவர்கள் **செய்யாதவர்கள்** போலவும், திருமணம் செய்யாதவர்கள் இனி திருமணத்தை நாடாமல் **என்னைப்போல்** (தனி மனிதனாக) இருந்துவிட்டால் ஊழியத்துக்கு பிரயோஜனமாக இருக்கும். காரணம் குடும்பத்திற்கு அதிக நேரம் கொடுக்காமல் – ஊழியத்துக்கு அதிக நேரம் கொடுக்கலாம். மேலும் பல இடங்களில் சீக்கிரம் சுவிசேஷம் அறிவிக்க வேண்டி இருப்பதால் திருமணம் செய்யாமல் இருப்பதால் ஊழியத்துக்கு அதிகநேரம் செவழிக்கமுடியும். இந்த அர்த்தத்தில் அப்படி கூறியிருக்கலாம். ஆனாலும் வேகிறதை பார்க்கிலும் விவாகம் செய்து கொள்வது நல்லது என்றும் கூறினாரே !

இயேசு கிறிஸ்து தன் உபதேசத்தில் 3வித **அன்னர்களைப்பற்றி** கூறும்போது **ஊழியத்துக்காக தன்னை அன்னர்களாக்கிக்கொண்டவர்கள்** என்ற கூட்டம் ஒன்று உண்டு என்று கூறினார். **இவர்களுக்கு காம உணர்ச்சிகள் சரீரத்தில் உண்டு,** ஆனால் கர்த்தருக்காக நான் நிறைய **சாதிக்க வேண்டும்,** நிறைய **இடங்களுக்கு சென்று** ஊழியம் செய்ய வேண்டும் என உளமாற **ஊழிய பாரம்** கொண்டவர்கள் **ஜெபத்தோடு தீர்மானித்தால்** அப்படிப்பட்டவர்களை **திருமணம் செய்யாமல் ஊழியம்செய்ய** கர்த்தர் விசேஷ அழைப்பை கொடுப்பார். அப்போதும் சரீரத்தில் உள்ள காம உணர்ச்சிகளை நீக்கிவிட்டு அழைக்க மாட்டார். அந்த உணர்ச்சிகளை ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நாளும் **கட்டுப்படுத்தி** பரிசுத்தமாக **குற்ற உணர்ச்சி இல்லாமல்**

ஊழியம் செய்ய உதவுவார். சிலர் சரீரத்தில் பாவம் செய்யமாட்டார்கள். ஆனால் **சிந்தனையில், கண்களினால்** பாவம் செய்பவர்கள் உண்டு. அதை உபவாசம் செய்து ஜெயிக்கலாம். தாவீது கூறுவதுபோல **உபவாசத்தால்** என் ஆத்துமாவை ஒடுக்கினேன் என்றார். அதாவது **சரீரம் விரும்புவதை** செய்ய சரீரத்துக்கு நான் கீழ்படியாமல் நான் விரும்புவதைபோல் என் சரீரம்தான் எனக்கு அடிமையாக வேண்டும் என்று தீர்மானித்தால் ஆவியானவர் அதற்கு **மிகவும் உதவுவார்**. பரிசுத்தமாக வாழ்வதற்காகவே ஆவியானவர் நமக்கு கொடுக்கப்படுகிறார். ஆகவே கலியாணம் செய்யாமல் ஊழியம் செய்யலாம்.

ஆனால் TPM பாஸ்டர்கள் கூறும் மற்றொரு **பொய்** உபதேசம் என்னவென்றால் **ஸ்திரியினால் கரைபடாமல் பரிசுத்தமாக வாழும்** லட்சத்து நாற்பதாயிரம் பேர்களின் கூட்டத்தில் நாங்கள் மட்டும்தான் இருப்போம் என்ற இவர்களின் முட்டாள்தனமான இந்த உபதேசத்தில் இவர் யோசிக்க மறந்துவிட்ட ஒரு காரியம் உண்டு.

**ஸ்திரிகளால் கரைபடாதவர்களின் கூட்டம்** என்றால் ஒரு **ஆண் பெண்ணோடு சரீர தொடர்பு வைத்ததால்தான் நாம் பாவக்கரைப் படுவோம்** என்று நினைக்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து கூறுகிறார், மத் 5ம் அதிகாரத்தில் 27,28ல் விபச்சாரம் செய்யாதிருக்க வேண்டும் என்று பலர் கூறுவதை கேட்டிருப்பீர்கள். **நான் உங்களுக்கு சொல்கிறேன். ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று என்று கூறினாரே !** விபச்சாரத்துக்கு சமம் என்று கூறவில்லை. விபச்சாரமே செய்துவிட்டாய் என்றுதான் எச்சரிக்கிறார்.

இந்த TPM **பாஸ்டர்கள்** ஒரு நாளும் இப்படிப்பட்ட **இச்சையோடு** சபைக்கு வரும் **பெண்களை** அல்லது வெளியேபோகும்போது வேறு எந்த பெண்களையும் இச்சையோடு பார்த்ததேயில்லையா? TPM சபை மூப்பர் ஒருவர் என்னிடம் சொன்னது, எங்கள் ஊர் TPM சபை பாஸ்டர் எப்போதும் மேடையில் **டேபிளுக்கு** பின்பக்கம் **மறைவாக உட்கார்ந்து** சபை மக்களை இரசியமாக கவனிப்பார். ஆராதனைக்கு வந்து கீழே அமரும், பெண்கள் உட்காரும் போது புடவை அல்லது வேறு விதமான ஆடைகள் விலகி ஆபாச காட்சி ஏதாவது தெரிகிறதா என்பதை கவனிப்பதாக என் மனைவி அடிக்கடி கூறினார். பிறகு சில வாரங்கள் நான் கவனித்தபோது அந்த பாஸ்டரின் கண்களில் பாவ பார்வையை கவனித்தேன். அதன்பிறகு நானே நீளமான **டேபிள்விரிப்பு** ஒன்றை விலைக்கு வாங்கி பாஸ்டர் பிரசங்கிக்கும் **டேபிள் மேல்** விரித்து அதன் **துணி தரையை தொடும் அளவு** நீட்டிவைத்தேன் என்றார். இப்படிப்பட்ட **பாஸ்டர்கள்** தங்களை **கரைபடாதவர்கள்** என்று எப்படி கூறு முடியும் ?

பொதுவாய் **திருமணம்** செய்யக்கூடாது என்று உபதேசிக்கிற எவரையும் (TPM பாஸ்டர்களை) **பொய்யர்கள்** என்று பவுல் கூறுகிறார். பவுல் **தீமோதேயு** என்ற வாலிப சீசனுக்கு ஆலோசனை கொடுத்து கடிதம் எழுதும்போது 1 தீமோ 4:2ல் **விவாகம் பண்ணாதிருக்க அந்த பொய்யர்கள் கட்டளையிடுவார்கள்.** நீ உன் உபதேசத்தில் ஜாக்கிறதையாக இரு என்று கூறுகிறார்.

இதை வாசிக்கிற TPM சபையில் உள்ள ஜாமக்காரன் வாசகர்களை கேட்கிறேன். உங்கள் சபை TPM சபை **பாஸ்டர்களை பொய்யர்கள்** என்று கூறுவதில் தவறு உண்டா?

மேலும் இப்படிப்பட்ட **பொய்யர்களான** TPM சபை பாஸ்டர்களில் **பெரும்பாலோர்** சபையில் **கலியாணம் செய்யதவர்களை கண்டால் பிடிக்காது.** திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளை பெற்றுவிட்டால் இனி **கணவன் மனைவி** சரீர தொடர்பு இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று

இவர்கள் தங்கள் பிரசங்கத்தில் கூறுகிறார்கள். நாம் **வருகைக்கு ஆயத்தப்பட வேண்டுமானால் ஸ்திரிகளால் கரைபடாமல்** இருக்கவேண்டும் அந்த நல்லெண்ணத்தோடுதான் இந்த ஆலோசனையை கூறுகிறேன் என்று பிரசங்கித்து **கணவன் மனைவிகளையே** பிரித்து விடுகிறார்கள். அந்த **பிரசங்க ஆடியோ** என்னிடத்தில் உண்டு. இப்படிப்பட்ட பிரசங்கத்தால் கணவன் மனைவிக்குள்ளே விரகதாபம் ஏற்பட்டு அதன் காரணமாக குடும்பத்தில் பிரச்சனை உண்டாகி கவுன்சிலிங் பெற, (ஆலோசனைக்கு) பல தம்பதிகள் என்னிடத்தில் வந்தார்கள். நான் **வசனத்தை காட்டி** மரணம் வரை **சரீர சந்தோஷம்** அனுபவிக்கலாம். உங்கள் பாஸ்டர் **பொய் சொல்கிறார்,** அதை கேட்காதீர்கள் என்று கூறி ஜெபித்து அனுப்பினேன். நீங்கள் இருவரும் இரட்சக்கப்பட்டு மரணம் வரை சாட்சியுடன் இருந்தால் வருகையில் இயேசுவோடு எடுத்துக்கொள்ளப்படுவீர்கள், சந்தேகம் வேண்டாம். இந்த விஷயத்தில் TPM பாஸ்டர்கள் பெரும் பொய்யை பேசி உங்களை பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று கூறியபின் கணவன் - மனைவி இரண்டு பேரும் சந்தோஷமாக வாழ்கிறார்கள்..

சிறுவயதில் நாம் கேட்ட **வால் அறுந்த நரியின்** கதைபோல் **தன் வால் அறுந்ததால்** எல்லா **நரிகளையும் வால் அறுத்துக்கொள்ள** ஆலோசனை சொன்னதாம். அதுபோல இந்த தவறான உபதேசம் சொன்ன TPM பாஸ்டர்களும் ஒரு விதத்தில் **நரி சுபாவம்** உள்ளவராக இருக்கிறார்கள். இவர்கள் உங்கள் இருவரையும் உங்களுக்குள் **சரீர தொடர்பு** உண்டாகாமல் பார்த்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட **பாஸ்டர்களிடமும்** TPM **சபைகளிடமும்** நீங்கள் ஜாக்கிறதையாக இருங்கள்.

## பொய் அன்னிய பாஷையை பேச பழக்குவிப்பதில் இவர்கள் வல்லவர்கள்

1965ல் அன்னிய பாஷை அனுபவம் எனக்கும் கிடைக்காதா என்ற ஆசையில் TPM(CPM) சபைக்கு சென்றேன். எனக்கு வேத வசன ஞானம் இல்லாத காலத்தில், விவரம் அறியாத அந்த ஆரம்ப காலத்தில் (TPM) அன்று **சிலோன் பெந்தேகோஸ்தே** சபை என்ற பெயரில் ஒரு வீட்டில் இயங்கியது. நான் **சனிக்கிமை** மாலை **காத்திருப்பு கூட்டம்** என்று அழைக்கும் கூட்டத்தில் பங்குகொள்ள பாஸ்டரால் ஆலோசனை பெற்றேன். அன்றுதான் எனக்கு **அன்னிய பாஷை** பேசும் **பெந்தேகோஸ்தே சபைகளின் மாய்மாலத்தை** முதல் தெளிவை பெற்றேன். நான் சென்ற அந்த சனிக்கிழமை அங்கு இரண்டு பாஸ்டர்கள் **அன்னிய பாஷை** எப்படி பேசுவது என்பதை மூன்று விதத்தில் **சொல்லிக்கொடுக்கும் ஏமாற்று வேலையை** கண்டேன். அதைக்குறித்த **முழு விவரத்தையும்** நான் பாஸ்டரிடம் கேட்ட கேள்விகளையும் குறித்து விளக்கமாக **கடந்த வருட** ஜாமக்காரனில் எழுதினேன். அவர்கள் பகிரங்கமாக மனசாட்சியில்லாமல் **பொய் பேசும்** பாஸ்டர்கள் என்பதை அறிந்துக்கொண்டேன். உணர்ந்தேன். தெய்வ பயம் இல்லாது தாங்கள் **அன்னிய பாஷையை** பொய்யாய் **சொல்லிக் கொடுக்கிறேமே** என்ற கூச்சம் இல்லாமல் **தலைமை** பாஸ்டர் முதல் **– உதவி பாஸ்டர்,** சபை பெண் ஊழியர்கள் வரை எல்லாரிடமும் **பொய்யும், மாயமாலமும்** புறையோடி போய்விட்டது.

உலகிலேயே சீஷர்கள் மரித்தபின் உருவான சபைகளில் சுமார் நூறு ஆண்டுகள் கழித்து **அமெரிக்கா முழு இரவு** ஜெப கூட்டத்தில் ஒரு பெண் **வாய் குழறி பேசியதை** கண்டவர்கள் அதை **அன்னியபாஷை** என்று விளம்பரப்படுத்திவிட்டார்கள். அது தீயாக பறவி பல நாடுகள் **பாஷையை** கற்று கொண்டது.

## இலங்கை பெந்தேகோஸ்தே சபையில் முதல் அன்னிய பஷை

இலங்கையிலுள்ள **இலங்கை பெந்தேகோஸ்தே** சபைதான் முதன்முதல் அன்னிய பாஷை பேசி அறிமுகப்படுத்தியது. இதிலிருந்து பல சபைகள் புதிது புதிதாக IPC, AOG, FULL GOSPEL சபை என்று பல பிரிவு பெந்தேகோஸ்தே சபைகள் ஈசலைப்போல் வீதிக்கு ஒன்றாக பெருகின.

## TPM சபையிலிருந்து பிரிந்தவர் பெரும்பாலும் காதலில் விழுந்தவர்கள்

சிலோன் பெந்தேகோஸ்தே (TPM) சபையிலிருந்து பிரிந்தவர்கள் பெரும்பாலும் காதலில் விழுந்து கலியாணம் செய்ய ஆசைப்பட்டவர்கள்தான். சபையை விட்டு பிரிந்து தனி சபை ஆரம்பித்தார்கள். சென்னை ACA சபை **பாஸ்டர் சுந்தரம்** (ZAC POONAN) **சகரியா பூணன்**. IPC ஸ்தாபகர். **பாஸ்டர் வாசு**, MPA சபை ஸ்தாபகர் **பல்லாவரம்** ACA சபை பாஸ்டர் ஆகிய இன்னும் ஏராளமானவர்களை TPM சபை உபதேசத்தின் அடிப்படையில் CPM (TPM) சபையை விட்டு நீக்கிவிட்டார்கள். அப்படி பட்டவர்கள் தனி சபை ஆரம்பித்து தங்கள் சபைக்கு தனி பெயர் சூட்டிக்கொண்டனர்.

(CPM) TPM சபையின் சரித்திரத்தை கிளரினால் பல கதைகள் வெளிவரும் CPM (TPM) **சபை ஸ்தாபகரே** காதலில் விழுந்து திருமணம் செய்துகொண்டவர்தான். சில வருடங்கள் மனைவிடன் குடும்ப வாழ்க்கையை நன்றாக அனுபவித்த பிறகுதான் CPM **பாஸ்டர்கள்** திருமணம் செய்யக்கூடாது என்ற **பொய்யான கள்ள உபதேசத்தை** ஞானோதயமாக பெற்றார். இன்றைய TPMக்கு 100 வருடம் வயதாகிறது.

## (CPM) TPM சபை தோன்றி 100 வருட நினைவு தினம்
## சிலோன் பெந்தேகோஸ்தே (வீஜணனி) சபையின் வரலாறு

மேலே நீங்கள் வாசித்தபடி வேத வசனத்துக்கு விரோதமான பல உபதேசங்கள் இந்த சபையில் இருந்தாலும் **கட்டுப்பாட்டுடன்** உள்ள சபை என்றால் அது TPM (CPM)சபை என்றால் அது மிகையாகாது.

திருமணம் செய்யாமல் வாழ்ந்துதான் பாஸ்டர் ஊழியம் செய்ய வேண்டும் என்ற **கள்ள, பொய்யான உபதேசத்திலிருந்து உங்கள்** தவறை திருத்திக் கொள்ளுங்கள் என்று யார் கூறினாலும் அந்த **பொய் உபதேசத்தில் கட்டுப்பாடு** மிகுந்தவர்கள்.

பொய்யான **அன்னிய பாஷையை** காத்திருப்பு கூட்டத்தில் கற்று கொடுத்து உண்மை விசுவாசிகளையும் பொய்யான **அன்னிய பாஷை** பேச **கற்றுக்கொடுப்பதில் கட்டுப்பாடுள்ள** சபை ஆகும்.

**பொய்யான** அன்னிய பாஷைக்கு – **பொய்யான** தீர்க்கதரிசனம் கூறுவதை சபை மக்கள் கேட்டு **அல்லேலூயா**! என்று வானளாவ கத்துவார்கள். ஆனால் தீர்க்கதரிசனம் அல்லது அன்னிய பாஷைக்கு வெளிபாடு கூறுகிற சகோதரி வீட்டிலும். தெருவிலும் சாட்சியில்லாதவர்கள், இவர் **சேலத்தில்** அஸ்தம்பட்டி என்ற இடத்தில் போலீஸ் லைன் காலனியில் வசிப்பவர். அவரின் தவறான சாட்சி இல்லா வாழ்க்கையைப்பற்றி சிலர் கூறக்கேட்டு அன்றைய பாஸ்டரிடம் நான் கூறி அந்த குடும்பத்தினரை விசாரியுங்கள். அவர் குடியிருக்கும் **இரண்டு** பக்கத்தில் உள்ள **குடும்பத்தினரை**

விசாரியுங்கள். அதில் ஒருவர் உங்கள் CPM (TPM) சபை விசுவாசிதான் என்றேன். விசாரித்து அதிர்ந்துபோனார். அன்றைய நாட்களில் நான் போகும் சபையில் ஆவிக்குறிய ஆகாரம் இல்லாததால் புதிதாக வந்துள்ள TPM பாஸ்டர் மிக ஆழமாகவும் சிறப்பாகவும் பிரசங்கிப்பார். என்பதை அறிந்து அந்த பிரசங்கத்தை கேட்கவே நானும் என் மனைவியும் ஆராதனைக்கு TPM சபைக்கு செல்வோம். **பாஸ்டர்** அவர்கள் நான் கூறிய விஷயத்துக்குகான நடவடிக்கையை அன்றுதான் செயல்படுத்தினார். அன்றைய துதி ஆராதனை முடியும் தருவாயில் **ஆண்கள்** பக்கமிருந்து ஒரு நபர் மெத்த படித்தவர். வழைமைாக அவர்தான் சத்தமாக **அன்னிய பாஷை பேசுவார்**. உடனே போலீஸ் காலனியிலுள்ள **சகோதரி த**ானும் **அன்னிய பாஷை** பேசி **தீர்க்கதரிசனம்** கூறினார். அவர் பாஷை பேசும்போது மிகவும் துள்ளுவார். துள்ளிக்கொண்டே கூறுவதாவது சபையே. விசுவாசியே கர்த்தர் சொல்கிறார்.--- என்று ஆரம்பித்தார். உடனே **பாஸ்டர்** மைக்கில் அந்த சகோதரியின் அருகில் உள்ள விசுவாசிகளில் யாராவது அவர் தலையில் **கை வையுங்கள்** என்றார். உடனே அந்த சகோதரி அடங்கி அமைதியானார்.

அனேக நாட்களுக்கு பிறகு பாஸ்டர் கூறினார். நீங்கள் அந்த சகோதரியை பற்றி கூறியது உண்மைதான். போலியான வாழ்க்கை, தன் கனவரையே கெட்ட வார்த்தையில் திட்டுவதும் . கோபம் வந்தால் அடிப்பதும், பொது குழாயில் தண்ணீர் பிடிக்க வரும்போது மற்ற பெண்கள் அந்த அம்மாளிடம் யாரும் வாய் கொடுக்க முடியாது. தண்ணீர் நான் தான் முதலில் பிடிக்க வேண்டும் என்று சண்டை போடுவார்கள். உடனே எல்லாரும் விட்டுவிடுவார்கள். அப்படிப்பட்ட **வாயாடி** என்பதை புரிந்து கொண்டேன். அப்போது நான் பாஸ்டரிடம் கூறினேன். அந்த சகோதரியின் வாழ்க்கையில் சாட்சியில்லை, - **தீர்க்கதரிசனமும் பொய்யாய் கூறுகிறார்** என்றால் ஆண்கள் பக்கத்தில் **அன்னிய பாஷை** பேசிய மெத்த படித்த அந்த நபர் பேசிய அன்னிய பாஷையும் **பொய்யான அன்னிய பாஷைதானே,!** அதற்கு பாஸ்டர் இப்போதுதான் சபையில் பல காரியங்களை ஒன்றன்பின் ஒன்றாய் சரிசெய்து கொண்டு வருகிறேன். நான் புதிதாக வந்தவன் என்றார்.

இப்படிப்பட்ட சபைதான் TPM சபை. ஆனால் இந்த சபையில் மற்ற பெந்தேகோஸ்தே சபையைவிட **ஆட்களின் எண்ணிக்கை** மிக அதிகமாக இருக்கும். காரணம் **சுகமளிக்கும ஜெபம்,** ஆறுதலின் ஜெபம் என்பது இங்கு பிரபலம். ஆகவே ஆராதனை முடிந்த உடன் ஜெபிக்க ஆள் கூட்டம் மிக அதிகமாக இருக்கும்.

நான் 1969ம் வருட முதல் **இலங்கைக்கு** அடிக்கடி கூட்டம் நடத்த போய் வருவேன். **சிலோன் பெந்தேகோஸ்தே** சபை விசுவாசிகளில் பெரும்பாலானோர் என் **ஜாமக்காரன்** வாசகர்களாகும். அவர்கள் மூலமாகத்தான் நான் பல வியஷங்களை CPM (TPM) பற்றி விசாரித்து அறிந்துக் கொண்டனே்.

கேரளா **மலையாளிகள்** இல்லாத ஒரே நாடு **இலங்கை** மட்டும்தான் என்பார்கள். ஆனால் **நான்கு மலையாள** குடும்பங்களை அங்கு சந்தித்தேன். அதில் இருவர் மர வியாபாரம் செய்பவர். அந்த நான்கு குடும்பங்களில் ஒருவர்தான் **திரு. ராமன் குட்டி** என்பவர். நான் இலங்கைக்கு சென்ற பல ஆண்டுகளுக்கு முன்பே **ராமன்குட்**டி இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் எடுத்து **PAUL** பால் என்று பெயர் மாற்றம் செய்துகொண்டார். அவர் உண்மையான தேவனுடைய மனுஷன் என்று கேள்விப்பட்டேன். சீக்கிரமே தன் வேத அறிவால் பிரசங்க தாலந்தால் **பாஸ்டராக** மாறி **பாஸ்டர் பால்** என்று அழைக்கப்பட்டார். திருமணமும் சில வருடத்திலேயே நிறைவேறியது.

ஒரு நாள் எண்ண மாற்றம் அவர் வாழ்க்கையில் நேர்த்ததோ நான் கேள்விப்படவில்லை. ஒரு நாள் **ஆராதனை வேளையில் மேடைக்கு தன் மனைவியை** அழைத்தார். **சபை மக்களுக்கு முன்பாக** கடந்த ஒரு வாரமாக **கர்த்தர் என்னனோடு** பேசியபடியே **இந்த நிமிட முதல்** இவளை **என் சகோதரியாக** ஏற்றுக்கொள்கிறன். நாங்கள் ஒன்றாக இருந்தாலும் மற்ற **Faith Home சகோதரிகள் கூடத்தான் அவர் படுத்துக்கொள்வார் –** இந்த விவரத்தை என் மனைவியிடம் ஒரு வாரத்துக்கு முன்பே கூறி **விளங்கவைத்து** அவரின் ஒப்புதலோடு நாங்கள் பிரிந்து வாழ்கிறோம். அவரும் நான் மற்றவர்களைபோல பெயித் (ஃஹோம் ஸிஸ்டர்ஸ்) **சகோதரியாகவே** வாழ்வேன் என்று கூறி சபை மேடையிலும் அதை அறிவித்தார்.

இனி முதல் நம் கிளை சபைகள் எங்கிருந்தாலும் நம் சபை பாஸ்டர்கள் யாரும் திருமணம் செய்யக்கூடாது என்று கட்டளையிடுகிறேன். கர்த்தர் என்னிடம் சொன்னதை நிறைவேற்றாமல் இருப்பது எப்படி என்றார். அன்று முதல் சிலோன் பெந்தேகோஸ்தே சபையில் பாஸ்டர்மார் யாரும் திருமணம் செய்வதில்லை.

இந்த வருட முதல் இந்த சபை துடங்கி 100 வருடங்கள் கடந்தது. உலகமெங்கும் உள்ள TPM சபை அங்கத்தினர் 37 மில்லியன் விசுவாசிகள் உள்ளதாக ஒரு பத்திரிகையில் வாசித்தேன்.

பாஸ்டர் பால் அவர்கள் இந்தியாவில் கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் அருகே **திருச்சூர்** என்ற ஊரில் இந்து குடும்பத்தில் பிறந்து கிறிஸ்துவை ஏற்று கேரளா, இலங்கை முழுவதும் பிரசங்கித்து பிரபலமானார். இவரோடு இரண்டு பாஸ்டர்கள் சேர்ந்துதான் TPM சிலோன் பெந்தேகோஸ்தே என்ற பெயர் சூட்டி சபைகளை உருவாக்கினார்கள். வாய்ப்பு கிடைத்தால் பாஸ்டர் பால் அவர்கள் திருமணம் எப்படி நடந்தது , கூட உள்ள பாஸ்டர்கள் இவருக்கு எதிராக ஆரம்பத்தில் செயல்பட்டார்கள். முடிவில் ஒன்றாய் இணைந்து ஆண்டவரின் மகிமைக்காக குடும்ப வாழ்க்கையை வெறுத்து உலகம் முழுவதும் சபைகளை வளர்த்தி நடத்தினார்கள்.

மேற்கொண்டு TPM பற்றிய மற்ற தகவல்களை நேரம் கிடைக்கும் போது எழுதுவேன். TPM சகோதரிகள் வெள்ளை உடுப்பு உடுத்துவதில்லை. தலையில் முக்காட்டுக்குபதில் ஸ்காா்ப் என்ற துண்டை முக்கோனமாக மடித்து தலையை மூடிக்கொள்வார்கள். முக்கியமாக நான் கலந்துகொண்ட இரண்டு நாடுகளில் உள்ள TPM சபைகளில் அன்னிய பாஷை சத்தம் கேட்கப்படுவதில்லை.

– டாக்டர் **புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

| | |
|---|---|
| IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 | **A/C No: 10764116842** |
| SWIFT CODE - SBININBB300 | **A/C No: 10764116842** |

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

| | |
|---|---|
| IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. | **A/C No: 1219101013622.** |
| SWIFT CODE - CNRB0001219 -1219101013622. | **A/C No: 1219101013622.** |

## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem-636005 |

I, **Dr. M.G.E.PUSHPARAJ** *hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

Dated : 1- 3-2023
Salem - 636 005

**(Sd.) Dr. M.G.E.PUSHPARAJ**
*Signature of Publisher & Editor*

**FEBRUARY 2023**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.